செ.வெ.எண்: 44 நாள்: 13.01.2025

**<u>கள்ளக்குறிச்சி மாவட்டத்தில் திருவள்ளுவர் தினம் 15.01.2025 மற்றும் குடியரசு தினம் 26.01.2025 ஆகிய இரண்டு நாட்கள் அனைத்து டாஸ்மாக் மதுபானக் கடைகள் மூடப்படும் - மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.எம்.எஸ்.பிரசாந்த், இஆப, அவர்கள் தகவல்.</u>**

தமிழ்நாடு மாநில வாணிப கழகத்தின் (டாஸ்மாக்) கட்டுப்பாட்டில் இயங்கி வரும் அனைத்து டாஸ்மாக் மதுபான சில்லரை விற்பனை கடைகள், மதுபான கடைகளை ஒட்டி உள்ள மதுக்கூடங்கள் மற்றும் நட்சத்திர அந்தஸ்து ஒட்டலில் உள்ள மதுக்கூடங்கள் அனைத்தும் 15.01.2025 (புதன் கிழமை) திருவள்ளுவர் தினத்தை முன்னிட்டும் 26.01.2025 (ஞாயிற்றுக்கிழமை) அன்று குடியரசு தினத்தை முன்னிட்டும் ஆகிய தினங்களில் மதுபான கடைகளை மூடிவைக்க வேண்டும்.

எனவே கள்ளக்குறிச்சி மாவட்டத்தில் உள்ள அனைத்து டாஸ்மாக் மதுபான சில்லரை விற்பனை கடைகள், மதுபான கடைகளை ஒட்டி உள்ள மதுக்கூடங்கள் மற்றும் நட்சத்திர அந்தஸ்து ஒட்டல்களில் உள்ள மதுக்கூடங்கள் (FL3A/FL3)அனைத்தும் மூடப்பட வேண்டும்.

மேலும் அன்றைய தினங்களில் மதுக்கூடத்தில் மதுபானம் விற்பனை செய்வதாக தெரியவந்தால், சம்மந்தப்பட்ட டாஸ்மாக் மதுபான சில்லரை விற்பனை கடைகளின் மேற்பார்வையாளர்கள், விற்பனையாளர்கள் மீது உரிய குற்றவியல் நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்றும், அதே போல், அன்றைய தினங்களில் மதுக்கூடத்தில் மதுபானம் விற்பனை செய்வதாக தெரியவந்தாலும் மதுக்கூடத்தின் உரிமங்கள் தற்காலிகமாக நிறுத்தி வைத்தல் மற்றும் உரிமங்களை இரத்து செய்தல் போன்ற நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்றும், மதுக்கூட உரிமைதாரர்கள் மீது உரிய குற்றவியல் நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.எம்.எஸ்.பிரசாந்த், இஆப, அவர்கள் தெரிவித்துள்ளார்.

---

**செய்தி வெளியீடு:** செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், கள்ளக்குறிச்சி மாவட்டம்.